Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 6

யாழ்ப்பாணம் மாசி 4 ஹிஜ்ரி 30 புதன்கிழமை (16-2-72)

16 FEB 1972
UNDERGRADUATE LIBRARY

தெய்வீக
நறுமணம் கமழும்
சண்முகா ஜவ்வாது
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்களும் :-: ஏகவிநியோகஸ்தர்களும்
ஆ. இராசையா அன் சன்ஸ்
(மருந்துக் கடை)
69, கே.கே. எஸ். ரோட் யாழ்ப்பாணம்.

வடக்கில் கடல் அரிப்பினால் பெரும்பகுதி நிலம் நாசம்?

75,000 ரூபா பெறுமதியான கராம்பு, சாதிக்காய் சிக்கியது

வல்வெட்டித்துறை, செவ். வல்வெட்டித்துறைக்குச் சமீபத்தில் கடலில் சுமார் 75,000 ரூபா பெறுமதியான கராம்பு, சாதிக்காய் மூடைகளை ஏற்றி வந்த தப்பாக்கிப் பிரயோகத்தில் பின்னர் வாழ், சுங்கக் சோஷ்டியினர் கைப்பற்றினர்.

யாழ். சுங்க அதிகாரி திரு. கனகரெத்தினம் தலைமையில் சென்ற சுங்கக் சோஷ்டியினர் கடலில் ரோந்து சுற்றிவரும்போது வள்ளத்தைக் கண்டனர், சுமார் 30 தடவைகள் தப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர் அவ்வள்ளத்தைக் கைப்பற்றினர். வள்ளத்திற்குள் 25 மூடை கராம்பு சாதிக்காய் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் கடத்தலுக்காக பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் சுமார் 30,000 ரூபா பெறுமதியான வள்ளம் பறிமுதல் செய்யப்பட்டது.

வள்ளத்தின் உரிமையாளர்களுக்கு 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. விசாரணையைத் தொடர்ந்து நடத்துமாறும் சுங்க அதிகாரி உத்தரவிட்டார்.

கடத்தப்பட்ட லொறி பிடிபட்டது; இருவர் கைது

யாழ்ப்பாணம், புதன் வைரவிக்கட்டப்பகுதியில் ஆயுதம் தாங்கிய சோஷ்டியினரால் வலுக்கட்டாயமாகக் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் லொறியைப் பொலிசார் நேற்றுமுன் தினம் சோப்பாயில் வைத்து கைப்பற்றினார்கள்.

லொறியுடன் சந்தேக நபர் இருவரும் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். இச்சம்பவம் சம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிசார் மேலும் மூன்று சந்தேகநபர்களைத் தேடிவருகின்றனர்.

லொறி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்படுகின்றது. சந்தேக நபர் இருவரும் நீதிமன்றில் வைக்கப்படுகின்றனர்.

ஓடிக்கொண்டிருந்த பிரகாச லொறியை கைதுடி யில் டார்ச்லை ஒன்றில் வந்த ஆயுதம் தாங்கிய சோஷ்டியினர் முன்னால் சென்று வழிமறித்து லொறி சாரதியிடமிருந்து சாவியை பலவந்தமாகப் பறித்து லொறியைக் கடத்திச் சென்றதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

பாறைகளை அரிக்கும் மீன்களை ஒழிக்க அரசு யோசனை

கொழும்பு, செவ். வடக்கில் கடற்கரைப் பிரதேசத்தில் பெரும் பகுதி கடல் அரிப்புக்குள்ளாகிவருவதாகக் கண்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள பாறைக்கற்களை நட்சத்திர மீன்கள் போன்ற சிறு ஜந்துக்கள் அரித்துத் தின்றுவருவதால் இப்பகுதியில் நிலம் கடல் அரிப்புக்குப் பெரிதும் உள்ளாகி வருகின்றதாம்.

கிழக்கு, தெற்குப் பிரதேசத்திலும் இந்நிலைமை மிக மோசமாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதுவரை நாடு முழுவதிலும் சுமார் 2,500 ஏக்கர் நிலம் கடல் அரிப்பினால் நீருக்குள் போயுள்ளதாம்; கடற்கரைகளில் காணப்படும் பாறைப்பாறைகள் கடல் அலைகளின் காரணமாக நில அரிப்பு ஏற்படுவதைத் தடுத்துவருகின்றன. ஆனால் இந்தப் பாறைகளை 'நட்சத்திர' மீன்கள் போன்ற ஜந்துக்கள் அரித்துத் தின்றுவிடுவதால் அவை வலுவிழந்து அலைகளின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் நசிந்துபோய் விடுகின்றனவாம் என்று சில காலத்துக்கு முன்பு இலங்கைக் கடற்கரைப் பகுதியில் ஆராய்ச்சி நடத்திய உலக விஞ்ஞானியான ஆர். தர் சினார்க் கறிவிடுத்தது இன்று குறிப்பிடத்தக்கது.

கடற்கரைகளிலுள்ள பாறைகளை அரித்து நாசமாக்கும் கடல் ஜந்துக்களை கொன்றொழிப்பதற்காகப் புதிய விஷமருந்தொன்றைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முயற்சி செய்வதாகத் தெரிகின்றது. கடற்பாறைகளை அரிக்கும் ஜந்துக்களை மாத்திரம் அழிக்கக்கூடியதாக இந்த விஷம் இருக்கவேண்டுமென்பதில் அரசு மிகவும் அக்கறையாக விருப்பதாகவும் தெரிகின்றது.

அரசின் தேக்குமரக் காடு தீக்கிரை; நெற்பயிரும் நாசம்

நெற்கில் காட்டுத்தீயின் அட்டகாசம்

கொழும்பு, செவ்வாய் ஞாயிற்றுப்பிட்டி, கடுகுலம் பகுதி தொகுதிகளில் மூன்று தினங்களுக்கு முன் ஒரு காட்டுத் பிடித்த நெருப்பு இப்போது பல பகுதிகளுக்கும் பரவிப் பெருஞ் சேதத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீயை அணைத்த நிலையைக் கட்டுப்படுத்த வதில் கிராமவாசிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான தேக்குமரக் காடு ஒன்றும் தீக்கிரையானது. நூற்றிலைப்பதுஏக்கர் நிலத்தில் வளர்க்கப்பட்டிருந்த தேக்குமரங்கள் முழுவதும் எரிந்து சாம்பராகிவிட்டதாம்.

அறுவடைக்குத் தயாராக இருந்த மூன்னூறு ஏக்கர்

(5-ம் பக்கம் பார்க்க)

"ஜே. ஆர். இல்லாதிருந்தால் ஐ. தே. கட்சியும் இல்லை"

அக்குறணை எம். பி. கூற்று

கொழும்பு, வியாழன் 'ஜே. ஆர். ஜயவர்தன இல்லாதிருந்தால் 1956க்கும் பிறகு ஐக்கிய தேசியக் கட்சி இருந்திருக்காது. ஐ. தே. கட்சியைத் திருத்தியமைத்தவர் அவரே திருத்த முயற்சி எடுப்பது புதிய வரலாறு சரித்திரத்தைத் திருப்ப முயற்சி செய்வதாகும்'.

இவ்வாறு அக்குறணை ஆட்சியன்ற உறுப்பினர் ஜனாப் ஏ. ஸி. எம் ஹமீத் கூறியிருக்கிறார்.

கடந்த சனியன்று ஸ்ரீகோதாவில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் செயற்குழு கூட்டத்தில் அவர் இப்படி தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் இவ்வாறு கூறியுள்ளார்:

இந்தக் கூட்டம் நடைபெறும் தினம் ஐ. தே. கட்சியின் வரலாற்றில் சோகமிகுந்த ஒரு நாளாகக் கொள்ளவேண்டும். ஜே. ஆர் ஜயவர்தனா இல்லாமலிருந்தால் இன்று இவ்வாறு நாம் ஆலோசனை நடத்துவதற்குக் கூட சந்தர்ப்பம் கிடைத்தாமல் போயிருக்கும். ஜே. ஆர். சம்பந்தமான தீர்மானம் நிறைவேறுமானால் ஐ. தே. கட்சி இனிமேலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் தெய்வம் என்று சொல்லிக் கொள்ள தகுதி அற்றதாகப் போய்விடும்.

ஜே. ஆர் கறியதாக வெளிவந்தவைபற்றி விசாரணை செய்யாமல் தீர்மானம் எடுக்கப்படுமானால் அது கட்சியின் ஜனநாயகத் தன்மையை இல்லாமல் செய்துவிடும். ஐ. தே. கட்சி தனி ஒருவரின் சொத்து அல்ல. தனி ஒருவரின் தனிப்பட்ட கருத்து கட்சியின் கருத்தாகிவிட முடியாது. எனவே இதுபற்றி மற்ற எல்லாரும் கருத்து வெளியிட இடம்

(5-ம் பக்கம் பார்க்க

கடை திறப்பு விழா

நிகழும் விரோதிகிருது வருஷம் மாசித் திங்கள் 6-ம் நாள் (18-2-1972) வெள்ளிக்கிழமை காலை 8-15 க்கும் — 9-15க்கும் இடையிலுள்ள சுபவேளையில் கீழ்க்காணும் ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்கு நிச்சயித்துள்ளேன். அந்தருணம் அனைவரும் வருகை தந்து எனது விபரீதத்தை ஊக்குவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வாமாஸ்

வெளிநாட்டு மதுபானக்கடை
மானிப்பாய் வீதி,
வண். வடமேற்கு, ஆனைக்கோட்டை.

VAMAS

இங்ஙனம்
தங்கள் ஒத்துழைப்பை நாடும்
அ. வாமதேவன்

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

4047

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
நடித்த
திருவருட் செல்வர்

சாந்தி
(சங்கானை)
இரவு 6-15, 9-30
சிவாஜி — ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

யாழ். தியேட்டர்
(வண்ணார்பண்ணை)
தினசரி 6-15, இரவு 9-30
காமினி பொன்சேகா
ஹதர தெனும சூரயோ
(சிங்களம்)

நாகன்ஸ் சினிமா
கல்லூரி
தினசரி 4-30 மட்டும்
சனி ஞாயிறு 10-30
MATCHLESS
6-30, 9-30 மணிக்கு
சனி, ஞாயிறு 2-30
மகாதேவி

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sundays 10-30
Sidney James
in
CARRY ON SPYING
(Color)
தினசரி 2-00, இரவு 9.45
ஜெமினி-ச. வி. சரோஜா
சௌகார் ஜானகி
நடித்த
பாக்கியலக்ஷ்மி

ராஜா எம். ஜி. ஆர். இரு வேடங்களில்
(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா - அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
நீரும் நெருப்பும்

ராணி சிவாஜி ஜெயலலிதா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
சவாலே சமாளி

வின்ஸர் சிவாஜி - ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] தங்கவேலு - நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த
சுமதி என் சுந்தரி

மனோகரா நாகேஸ்வரராவ்—
(யாழ்ப்பாணம்) அஞ்சலிதேவி ரங்கராவ்
சனி, ஞாயிறு 10-30 தினசரி 2-30, 6-30, 10-00
அனார்கலி

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
★ சிவாஜி கணேஷன்
★ சௌகார் ஜானகி
★ அசோகன் ★ லக்ஷ்மி
இன்னும்பலர் நடித்த
காவல் தெய்வம்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00, பி. ப. 2-00.
மாலை 6-00, இரவு 9-30
ஜெய்சங்கர் - சகுந்தலா
மனோகர் - ஆனந்தன் - தேவர்
தேங்காய் சீனிவாசன்
நடித்த
சி. ஐ. டி. சங்கர்

18-2-72ல் உங்களை சந்திக்கிறான்!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) **லிடோ**
திரைகளில்
எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் மகத்தான தயாரிப்பு
ரிக்ஷாக்காரன்

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டு வேலைகள் கியர்ச்சக்கரம் வெட்டுதல் (Gear whee cutting) என்ஜினியரிங் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3977

வைத்தியம்
மலிவைத்திய ஆலோசனை இலவசம், அரைச்சலவர் ரூபா 150/- திறமான பற்களைக் கட்டலாம். வலி விளையாமல் கழட்டலாம். சிங்கப்பூர் பல்கட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், மேல் மாடி, பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4014

வாதம், கிரந்தி தொல்வு ஆகிய விபரீதங்களை முற்றாக குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எம். வல்லிபுரம் (D A M) தக்பொக்கரன் வைத்திய சாலை, இராசா வீதி நீர்வேலி மார்க்கெட், யாழ்ப்பாணம் 3898

சோதிடம்
நிறம், வயது, பூமி பெயர், குறித்து, 15 சதமுத்திரையுடன் உறையனுப்பி பதில் பெறவும். இலவச சேவை கருதாத ஆருடம் ஞானவண்டி வைத்தியசாலை, அதிபர் ந. சண்முகராஜா, கொக்குவில். 3900

விற்பனைக்கு
வைத்திய ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் விண்ணப்பமடிவங்கள் பெற்றுக்கொள்ளலாம். விலை ஒன்று ரூபா 1/- புளூம் டெப் இன்ஸ்டிடியூட்டெல்லி லடி, ஏரலெட்டி. 4040

பரந்தனிலும், கிளிநொச்சியிலும் நீர்ப்பாய்ச்சக்கூடிய தென்னைகள், நடேஸ்வரா கல்லூரி வாலிபேசன் துறை, நாவற்குளி புவைவிரத நிலையம் ஆகியவற்றிற்கு தண்ணையிலட்டிடக் காணிகள், பலவகையான குடிவட ரக தென்னங் கன்றுகள் 25 மாதங்களில் பயன்தரத்தக்வை என்பதற்கு உத்தரவாதம் குளிக்கிறோம். தொடர்புகொள்க: ஆர். ஜி. இராஜநாயகம், நாவற்குளி புவைவிரத நிலையத்திற்கு தண்ணையில், வைதடி. 4049

தேவை
பெரிய விவசாயப்பண்ணையில் வேலைசெய்ய விரும்பும் 14, 18 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் தேவை. நல்ல சம்பளமும் சாப்பாடும் தங்குமிடமும் கொடுக்கப்படும். முன்னேற இடமுண்டு. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். ஆண்டு பெப்ரவரி 16-ம் திகதி புதன்கிழமை நேரில் வரவும். விலாசம் 18 B ஆஸ்பத்திரி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4016

வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
காந்தாராவ் - ராஜ்ஸ்ரீ
நடித்த
வீர சபதம்

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சே. ஆர் விஜயா
நடித்த
சரஸ்வதி சபதம்

லூர்துமாதா திருநாள்

படுத்தித்துறை, செவ். தும்பளை லூர்துமாதா திருநாள் நேற்று முன்தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வாழ், உதவி மேற்றிராணியார் அதிவண. எக். ஆர். அன்ரனி இதற்கலந்துகொண்டு விசேட பூசை நிறைவேற்றினார். இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. வழக்கத்திலும் பார்க்க இவ்வாண்டு கூட்டம் பெருகியிருந்தது.

0 0 0

மன்னார், ஞாயிறு

மாந்தைப் பிரிவிலுள்ள லூர்துமாதாதிருநாள் வெகு விக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை யாடத்பூசையில் மூன்று குருவர்கள் கலந்துகொண்டனர். திருநாளுக்குமுன்தினம் வேஸ்பர் ஆராதனையும் - மெழுகுவர்த்தி சுற்றுப்பிரகாரமும் நடைபெற்றன. மெலறி ஜெயநேசன் தலைமையில் நடைபெற்றது. இத்திருநாளை பொலிவு எடுப்பிக்கு சனசமூக நிலையத்தினர் லூர்து செபிகளுடன் சிரமதான முறையில் துப்புரவு செய்ததை குறிப்பிடத்தக்கது

.....

லூர்துமாதா கவியரங்கு

வாழ்ப்பாணம், புதன் பரிசுத்த லூர்துமாதா திருநாளை முன்னிட்டு வாழ். குடும்பத்திலுள்ள லூர்து செபியில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. இதை முன்னிட்டு வாழ். ஆலய கோவிலமைந்தானத்தில் 'லூர்துமாதா' எனும் தலைப்பில் கவியரங்கமும் இடம் பெற்றது: ...

இம்முறை யாத்திரிகர் குறைவாம்

வாழ்ப்பாணம் புதன் திருக்கேதீஸ்வரத்தில் இம்முறை எவ்வித திருவிழாச் சம்பவங்களோ வேறு எவ்வித ஆரம்பாடுகளோ இடம் பெறவில்லை என பொலிசார் தெரிவித்தனர். வழக்கத்திலும் பார்க்க இம்முறையாத்திரிகர்கள் குறைவாகவே வந்திருந்தனர் என்றும் கார்களில் வரும் யாத்திரிகர்களும் மிகக்குறைவாகவே வந்திருந்தனரென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

மன்னார் உதவிப்பொலிஸ் அதிபர் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிறந்தமுறையில் கடமையாற்றினர்கள். நடமாடும் பொலிஸ் வான் முதல் நடமாடுவதாக அங்கு கடமையாற்றி பொலிசாருக்கு உணவுகளையும் வழங்கியது.

திருக்கேதீஸ்வரத்திற்கும் புலவிரத நிலையத்திற்கு மிடையில் உடனுக்குடன் தொடர்பு இருந்தமையால் யாத்திரிகர்களின் பிரயாணவசதிகள் தடையில்லாமல் நடந்து கொண்டிருந்தது.

யு. எஸ். நாசகாரி
இலங்கை விஜயம்

கொழும்பு, செவ். அமெரிக்க 7-வது படையின் நாசகாரிக் கப்பலான யு. எஸ். எஸ். வாக்டெ நக் லென்ன விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது. பிரன்தாப கப்பல் கொழும்பு துறைமுகத்தில் மூன்று நாட்களுக்கு தங்கியிருக்கும்.

எதிரோப்பியரின் இருந்த திடும்பும் யு. எஸ். எஸ். வாக்டெ அந்த நாட்டிலிருந்து படைப்படை தினவிழாவில் பிரிந்தானிய, பிரெஞ்சு, சூடான், எதியோப்பியா, சோவியத்து கப்பல்களுடன் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

பெ. ஆ. சங்கம்

வல்வெட்டித்துறை, செவ் வல்வை மாவிர் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பின்வருவோர் மேற்படிசங்க நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்

போஷகர் திரு க துரைரத்தினம் உபபோஷகர்கள்: திரு து நவரத்தினம் திரு ஏ எஸ் யோகராஜ் திரு அருசபாரத்தினம் செயலாளர், திரு சா. சேவற்கொடியோன் உப செயலாளர் செல்வி எஸ் ஜீ மாலினி பிள்ளை நிகழ்ச்சிகளுக்கு தலைவர் திருஎஸ் சத்தியமூர்த்தி உதவிகளுக்கு எஸ் சோமசுந்தரம் பொருளாளர் எஸ் கப்பிரமணியம்

மற்றும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக குழுவும் நியமிக்கப்பட்டது

0 0 0

சாவகச்சேரி, செவ்.

தென்மராட்சி இலக்கிய மன்றத்தில் 17-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: வி என் நவரத்தினம் இ சிதம்பரப்பிள்ளை. தலைவர்: திரு எக் விஞ்சித்தம்பி உபதலைவர்கள்: எக் பொன்னம்பலம் எஸ் சரவணமுத்து. காரியதரிசி: வி நடேசன். உபகாரியதரிசி இராசரத்தினம். தலைவி: வி இரத்தினராசா. நிர்வாகசபை பெயரும் தெரிவு செய்யப்பட்டது.

தண்ணீர் தடை?

சங்கானை, செவ். விக்கமடு படித்த வாலிபர்கள் குடியேற்றத்திட்டத்திற்குச் செல்லும் வாய்க்கால்நீர் தடைசெய்யப்பட்டு வருகிறதாம். இப்பகுதியில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்கள் இந்நீரைத் தங்கள் தேவைக்கென தடைசெய்து நீர்இறைக்கும் இயந்திரங்களைப் பாய்ச்சகின்றனர் என புகார்செய்யப்படுகின்றது.

குடியேற்ற வாலிபர்கள் மிளகாய்ச்செய்கையில் தீவிரப்பட்டுள்ள இவ்வேளையில் விக்கமடுக்குளம் நிறைக்கப்பட்டிடுக்கும்சந்தர்ப்பத்தை பயன்படுத்தியே ஓடிச் சொல்லிடுக்கும் நீரைத் தடைசெய்ய விஷமிகள் முனைந்தனர் என்றும் இதனாலேயே குடியேற்றத் திட்டத்திற்கு தண்ணீர் தடுப்பாடு ஏற்படக் காரணம் என்றும் சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகட்கு முறையிடுசெய்யப்பட்டுள்ளதாம்.

வேட்டி யாருடையது?

கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மாலை 5 மணிக்கு வண்ணார்பண்ணை நோக்கிச் செல்லும் ஒருதோர் புகையிரதவண்டியில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. கி செல்வரத்தினராசாவால் வேட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'சமநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

இன்று விபூதித் திருநாள்

யாழ்ப்பாணம், புதன் இன்று விபூதித் திருநாள் சைவ மதத்தோரிடையே நினைவு கூரப்படுகிறது. இதனை முன்னிட்டு விசேட சடங்குகள் யாழ் ஆலய கோவிலில் இடம் பெறுவதுடன் மாலை ஆராதனையும் நடைபெறவுள்ளது.

வங்காள தேசத்திற்கு பாரதப் பிரதமர் அடுத்தமாதம் விஜயம் செய்வார்



இந்திராவை வரவேற்க டாக்காவில் மக்கள் ஆர்வம்

புதுடில்லி, பெப்.15

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி வங்காள தேசத்துக்கு அரச முறையில் அடுத்தமாதம் 17ம், 18ம் திகதிகளில் விஜயம் செய்வார்.

கனடாவும் முறைப்படி அங்கீகரித்தது

வங்காளதேசத்தை கனடாவும் முறைப்படி அங்கீகரித்துள்ளது. வங்காள தேசத்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரித்துள்ள செய்தியை கனடா பிரதமமந்திரி திரு பீரூடோ பிரதம மந்திரி ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு அறிவித்திருக்கிறார்.

கொமன்வெல்த்நாடுகளில் கடைசியாக வங்காள தேசத்தை அங்கீகரித்துள்ள முதலாவது பெரிய நாடு கனடாவாகும்.

ஏற்கனவே பிரிட்டன், சோவியத்யூனியன், பிரான்ஸ் போன்ற பல பெரிய நாடுகள் வங்காளதேசத்தை அங்கீகரித்துள்ளன.

ஐரோப்பிய பொதுச் சந்தையில் உள்ள ஆறு நாடுகளான எல்லா நாடுகளும் வங்காள தேசத்தை சுயநிர்ணய ஆற்றலுள்ள சுதந்திர நாடாக அங்கீகரித்து விட்டன. விரைவில் கொமன்வெல்த்திலும் வங்காள தேசத்தை அனுமதிப்பது பற்றி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஷேக் - கென்னடி ஆலோசனை

ஷேக் முஜிபுர் ரஹ்மானுடன் செனட்டர் எட்வேர்ட் கென்னடி நேற்று கால் அரை மணிநேரம் ஆலோசனை நடத்தினார். பின்னர் நிருபர்களிடம் பேசிய அவர் வங்காள தேசத்தை அமெரிக்கா வெகு முன்பே அங்கீகரித்திருக்க வேண்டும் என்றார்.

நிக்ஸன் நிர்வாகம் உண்மை நிலையை உணர வேண்டும் என்றார். வங்காள தேசத்தை அங்கீகரிக்க வேண்டும் எனக்கோரும்கட்டுத் தீர்மானம் ஒன்று அமெரிக்க காங்கிரஸினால் அங்கீகரிக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கு முன்பு வங்காள தேச வெளிஉறவு அமைச்சர் அப்துஸ் சமத் ஆசாத் கானும் அவர் கண்டு பேசினார். பாகிஸ்தான் ராணுவம் வங்காள தேசத்தில் நடத்திய அட்டூழியங்கள் பாராட்டி லேயே மிகமோசமான நிகழ்ச்சியாகும் என்று செனட்டர் கென்னடி ஜனாப் ஆஸாத்திடம் கூறியதாகத் தெரிகின்றது.

செனட்டர் கென்னடி டாக்கா வந்தடைந்தபோது அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாணவர் மத்தியில்

நேற்று டாக்கா பல்கலைக் கழகத்தில் மாணவர் மத்தியில் உரை நிகழ்த்திய செனட்டர் கென்னடி பங்காளதேஷ் குடியரசின் உண்மைத் தன்மையை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றார்.

அவர் பேச்சைக் கேட்ட மாணவர்களும் அறிஞர்களும் பெருத்தாரவாரக் கூடியிருந்தனர்.

அவர் மேலும் பேசுகையில், வங்காள தேசத்தில் ஏற்பட்டுள்ள சுதந்திர விடுதலை வேட்கையை உலகில் எந்த சக்தியாலும் அடக்கிவிடமுடியாது. இந்த விடுதலை உணர்ச்சி உலக நாடுகளில் சுதந்திரத்துக்காகப் போராடுபவர்களும் மக்களுக்கு ஊக்கத்தரும் சக்தியாக இருந்துவரும் என்றார்.

வங்காளதேச அரசாங்கத்தின் அழைப்பையேற்று பிரதமர் இந்திராகாந்தி டாக்கா வந்து சேர்கிறார்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் பாகிஸ்தான் சிறையிலிருந்து விடுபட்டு லண்டன்வழியாக டாக்கா திரும்புகையில் புதுடில்லியிலும் விஜயம் செய்த போது பிரதமர் இந்திராவை தம் நாட்டுக்கு விஜயம் செய்யும்படி கோரிக்கை விடுத்தார். அதன்படியே பிரதமர் இந்திராவுடன் பேச்சு நடத்துவதற்காக ஷேக்முஜிபுர் ரஹ்மான் கல்கத்தாவுக்கு வந்த போதும் ஏற்கனவே விடுத்த அழைப்பை மீண்டும் வலியுறுத்தினார். வதந்தியும் வாய்ப்பும் ஏற்படும் போது வருவதாக திருமதி காந்தி அப்பொழுது ஷேக்கிடம் தெரிவித்திருந்தார். அதன்படி அடுத்த மாதம் 17ம், 18ம் திகதிகளில் வங்காள தேசத்துக்கு விஜயம் செய்ய இந்திரா முடிவு செய்துள்ளார்.

திருமதி காந்தி வங்காள தேசத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் தகவலை நேற்று அந்த நாட்டு வெளிஉறவு அமைச்சர் ஜனாப் அப்துஸ் சமத் ஆஸாத் நேற்று டாக்காவில் அறிவித்தார்.

திருமதி காந்தியின் பங்காளதேஷ் விஜயத்தை அந்த நாட்டு மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தின்போது இந்திய அரசாங்கம் படைகளை அனுப்பி உதவியமைக்காகவும், பாகிஸ்தான் ராணுவ அட்டூழியங்களைத் தாங்கமுடியாமல் ஓடி வந்த அகதிகளுக்கு இந்தியா புகலிடம் அளித்து காப்பாற்றியமைக்காகவும், பங்காளதேஷ் மக்களுக்காக உலக நாடுகளில் ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காகவும் இந்தியப் பிரதம மந்திரிக்கு பங்காளதேஷ் மக்கள் தம் நன்றியை நேரடியாகச் செலுத்துவதற்கு ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள்.

நெருக்குதலுக்கு பணியமாட்டோம்

— இந்திரா

எம்மாதிரியான நெருக்குதலின் மூலமும் இந்தியாவின் அடிப்படைக் கொள்கையை மாற்றிவிடமுடியாது என்று இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

இந்தியாவை உறுதியான வலுவுள்ளவராகவும் வைத்திருக்கும் அடிப்படைக் கொள்கைகளை மாற்றுவதற்கு எம்மாதிரி நெருக்குதல் ஏற்படுத்தப்பட்டபோதிலும் அதற்கு இந்தியா பணிந்து போய்விடாது என பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி மத்திய பிரதேசத்தில் ஜபல்பூர் என்ற இடத்தில் பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்தினார்.

பாகிஸ்தானுக்கு ராணுவ உதவிகள் அழிவுதரத்தக்கவை என்று எமது எச்சரிப்பை போக்குகளை இந்தநாடுகள் இன்னமும் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனவென்றார் எமது.

முன்னாள் எம்.பி. காலமானார்

கோண்டாவில், செவ்.

முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. டபிள்யு விஜயசிங்க காலமானார். இவர் 1960 மார்ச்சில் அம்பாறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். 1960 ஜூலையில் மீண்டும் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1964 டிசம்பரில் ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்த இவரை 1964 ஒக்டோபரில் திரு. சி. பி. டி. சில்வா வெற்றி பெற்றார்.

நாடுகள் இன்னமும் உண்மை நிலையை உணரவில்லை என்றார் எமது கால்சாரப் போக்குகளை இந்தநாடுகள் இன்னமும் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனவென்றார்.

சீன — அமெரிக்க

வர்த்தகக்கட்டுப்பாட்டை நிக்ஸன் மேலும் தளர்த்தினார்

வாஷிங்டன், பெப். 15

சீனாவுடனான வர்த்தகத்துக்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளை அதிபர் நிக்ஸன் மேலும் தளர்த்தியுள்ளார்.

இதன்படி சீனா அமெரிக்காவிடமிருந்து ரயில் தளவாடங்கள் போன்ற பொருட்களை தடையில்லாமல் இறக்குமதி செய்துகொள்ளலாம்.

நிக்ஸன் எடுத்துள்ள இந்த நடவடிக்கையின் மூலம் சோவியத்யூனியன் அமெரிக்காவுடன் வைத்துள்ள வர்த்தக உறவுகளின் மட்டத்துக்கு சீனாவின் வர்த்தக உறவுகளையும் உயர்த்தினார் என்று நம்பப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகளுக்கும் நிக்ஸனின் சீனவிஜயத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்று கூறப்படுகின்றது.

நிக்ஸனின் இந்த நடவடிக்கையை சீனர்கள் வெகுவாக வரவேற்பார்கள்என்று கருதப்படுகின்றது.

பீகிங் ஏற்பாடு

அதிபர் நிக்ஸன் சீனாவுக்கு விஜயம்செய்யும்போது அங்குள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு செல்வார் போலவே.

அதிபர் நிக்ஸனின் வரவை யொட்டி சீனாவில் ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பீகிங் நகரம் புதுமெருகுடன் காட்சியளிக்கின்றது. இந்நகரில் உள்ள தலைவர் மாளிகையில் பெரிய உருவப்படம் அமைப்பு மெருகூட்டப்படுகின்றது.

பெண் ஏமாற்றினாரம்: வாலிபன் தற்கொலை

சங்கானை, செவ்.

பல்லிக்கடத்தில் இரவுக்காவல் செய்த வாலிபர் ஒருவருக்கு, விடிந்ததும் தேநீர் கொண்டு சென்றவர், அவரைப் பிணமாகக் கண்டு திகைத்தார். இச்சம்பவம் சங்கானையில் நடைபெற்றது. கொப்பியொன்றில் அவர் எழுதிய கடிதத்தைப் பொலிஸார் கண்டெடுத்தனர்.

"என்னை ஒருத்தி ஏமாற்றி விட்டாள். பொலிஸ் ஐயா, எனது விருப்பத்திற்கே இறந்தேன். ஆமாம் நான் உங்களுக்கு முன்பதாக போகின்றேன்" என்ற வாக்கியங்கள் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தன.

சங்கானை செப்பிரகாசா வித்தியாசாலையில் இரவுக் காவலாளியாகக் கடமை யாற்றி வந்தவரும் நீர்வேலியைச் சேர்ந்தவருமான இளையதம்பியின் நாதன் என்பவரே இவ்விதம் பிணமாகக் காணப் பட்டவராவர். இவர் கிடுமிநாளி அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாக மரணவிசாரணையில் நிர்ப்பந்திக்கப்பட்டது.

மறுநாள் காலை உறவினர் ஒருவர் விக்கிரகனுக்குத் தேனீர் கொடுக்கச் சென்றபோதே சம்பவம் பொலிஸுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து ஸ்தலத்திற்குச் சென்ற சங்கானைப் பொலிஸார் சேர்ந்த திரு. சுந்தரசாமி கிடுமிநாளிப் போத்தல் ஒன்றையும் கொப்பி ஒன்றில் இவரால் எழுதப்பட்டதெனக் கருதப்படும் கடிதமொன்றையும் தீப்பெட்டி சிகிச்சிறற் பெட்டி ஆகியவற்றையும் கண்டெடுத்தார்.

டாக்டர் திருமதி போகராசா பிரேத பரிசோதனை நடத்தினார். மரணவிசாரணை அதிபர் திரு. வே. சேனாதிராசா விசாரணைகளை நடத்தினார்.

விவசாய கல்வி மாஅதிபதி வடக்கு விஜயம்

பருத்தித்துறை, செவ்.

விவசாயக் கல்வி அதிபதி டாக்டர் லயனல் டீ சில்வா இம்மாதம் 16-ம் திகதி வடபகுதியிலுள்ள அதிபர் பயிற்சிக் கல்லூரிகள் பிரதான மத்திய மகாவித்தியாலயங்கள் ஆகியவற்றிற்கு விஜயம் செய்யவிருக்கிறார். வடபகுதியிலுள்ள பாடசாலைத் தோட்டங்களிக் உணவு உற்பத்தி அதிகரிப்பு பற்றி இங்குள்ள உத்தியோகத்தருடன் கலந்தாலோசிப்பார்.

அடுத்த நாள் 17-ம் திகதி மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்யவிருக்கும் டாக்டர் டீ சில்வா நம்பைக்குளம் மகாவித்தியாலயத்தையும் பார்வையிடுவார் அங்கு பலரக நெல்லகைகள் பயிரிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. வவுனியா மாவட்ட விவசாயக் கல்வி அதிபர் திரு. பி. கணேசமூர்த்தி சகிதம் இவர் பல பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடுவார்.

தம்பிரான் உரை

யாழ்ப்பாணம், புதன்

இன்று மாலை யாழ்ப்பாணம் பெரியகடையடி, நெல்லியடி நாவலர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரானின் "மகாபாரதம்" தொடர் விரிவுரையில் "இராஜசூயயாகம்" என்னும் பொருள் பற்றிய பிரசங்கம் இடம்பெறும். தொடர்ந்து வசந்தமண்டப பூசை சுவாமி வீதி உலா ஆகியன இடம் பெறும்.

0 0 0

யாழ்ப்பாணம், புதன்

இன்றிரவு 7-45 மணிக்கு சோணாமை வைரவர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரானின் "பக்த "வரஞ்சோதி" என்னும் பொருள்பற்றிய சொற்பிரசங்கம் நடைபெறும்.

மார்ச் 1-ம் தேதிமுதல் 2300 ஆசிரியர் நியமனம்

கொழும்பு செல்வாய் மார்ச் மாதம் 1-ம் திகதியிலிருந்து 1,800 ஆங்கில ஆசிரியர்களும் 300 நடன, சங்கீத ஆசிரியர்களும் 200 கைப்பணி ஆசிரியர்களும் நியமனம் பெறவிருக்கிறார்கள். இவர்களின் நியமனக் கடிதங்கள் இம்மாத இறுதிக்குள் அனுப்பிவைக்கப்படுமென கல்வி அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

மார்ச்மாதத்திற்கிறமனம் பெறுவோர் கிராமப்புறங்களிலும், கஷ்டமான பிரதேசங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கே நியமிக்கப்படுவார்கள். அநுராதபுரி, பொலனறுவ, அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய இடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து இருந்துவருவதாக புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

மார்ச்மாதம் முதல் ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ள பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் பற்றாக்குறை பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

தங்கள் தொகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த எம். பி.க்களும் கல்வி அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

"பெற்றோர் ஒத்துழைப்பு இல்லையெனில் பயனில்லை"

காங்கேசன்துறை செல்வாய் 'இந்நாட்டில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள இந்நேரத்தில் பெற்றோர்கள் அதுபற்றி அக்கறைகாட்டாதிருந்தால் பயனில்லை அவர்கள் நாட்டின் கல்வியபிவிருத்தியை முன்வைத்து இந்நிலைமை பூரணமாக வெற்றிபெற ஒத்துழைக்கவேண்டும்' என்று காங்கேசன்துறை ஆங்கில மகாவித்தியாலய அதிபர் திரு ஆர். சண்முகரத்தினம் வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு நற்சமயம் ஏற்படுத்தப்பட்டுள்ள புரட்சிகரமான கல்வித்திட்டத்தை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு பெற்றோர்களிடம்தான் உண்டு பெற்றோர்கள் அளிக்கும் ஊக்கத்தினால் பாடசாலையினதும் மாணவர்களினதும் முன்னேற்றம் தங்கியுள்ளது,

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் பேசுகையில் இவ்வித்தியாலய மாணவர்கள் விளையாட்டுத்துறையில் முன்னேறும் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும்ஆனால் இவ்வித்தியாலயத்துக்காக விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாதிருப்பதால் அவர்களின் ஆர்வம் தடைப்படுகிறது என்றும் முடிக்குரிய காணிகள் ஏதாவது இருந்தால் அக்காணிகளைப் பெற்று விளையாட்டு மைதானம் அமைத்துத் தருவதற்கு முயற்சிப்பதாகவும் கூறினார் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

ச. ச, நிலைய சமாசவிழா

யாழ்ப்பாணம், புதன் யாழ்-மாவட்ட சமாசமுக நிலையங்களின் சமாசவிழா எதிர்வரும் ஏப்பிரல் மாதம் நடைபெறவிருப்பதாக தொகுதி வாரியாக அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

யாழ்ப்பாணம், நல்லூர், வடமேற்கோட்டை, ஊர்காவற்துறை ஆகிய நான்கு தொகுதிகளுக்கும் மேற்படி சமாசநிர்வாகசபை உறுப்பினரும் சமாச யாழ் இணைச் செயலாளருமான திரு சி வரதராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். கோப்பாய்த் தொகுதிக்கு திருமதி வேதவல்லி கந்தையாவும், உடுவில்தொகுதிக்கு திரு எஸ் திருநாவுக்கரசு, காங்கேசன்துறைத்தொகுதிக்கு திரு எஸ் திருநாவுக்கரசுவும், படுத்தித்துறைத் தொகுதிக்குதிரு ரி வேரசாமியும், சாவகச்சேரி, பரி ஆகிய பகுதி களுக்கு மேற்படி சமாசத்தலைவர் திரு வே சுப்பையாஜே பி. யும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் போட்டிகள் சம்பந்தமான விதிகளைப்பற்றி ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு போட்டிகளிலும் ஒருவர் மட்டுமே தோற்றலாம் எனவும் போட்டிகள் நடைபெறும் இடமும் திகதியும் அவ்வப்பகுதி அமைப்பாளர்களினால் அறிவிக்கப்படுமெனவும், நாடகப் போட்டிக்கு 15 நிமிடமும், நடனப்போட்டிக்குப் பத்து நிமிடமும், பேச்சுப்போட்டிக்கு 5 நிமிடமும் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் எனவும், நீண்டதூர வரத்திகளேட்டப் போட்டி நடைபெறுதெனவும் விழா அமைப்பாளர் தெரிவித்தனர்.

பிரிவுபசாரம்

மன்னார். செவ்.

மன்னார் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ஆரியரத்தினம் புத்தளம் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை யொட்டி மன்னார் சிறைச்சாலை ஊழியர்களால் கடந்த வெள்ளிக்கிழமை பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

இன்றைய பலன்

மாசி மாதம் 4-ம் திகதி

(16 - 2 - 72)

மேஷம்- சித்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும்.

ரிஷபம்- ஆலமோசனை மனத்துடன் அமைதியும் குன்றும். வலிவிலம் எதிரிகளும் காத்திருப்பர் இன்று.

மிதுனம்- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும்.

கடகம்- வாளம் பாடி போக்காளம் இசைப்பீர். வாழ்விலும் ஒளிவீசும். முதியவர் ஒருவர் உமக்கு நல்வழிகாட்டுவார்.

சிம்மம்- கற்கண்டுபோல் இனிக்கும் வாழ்க்கை. சாதகவிவகாரங்களுக்கும் இடம் உண்டு. கனஸ்திரவழியில் முயற்சி கனதனம் சேர்க்கும்.

கன்னி- உறவுகள் [illegible] படும் உள்ளத்தில் உவகை தங்கும். உயர்வுக்கு வழி பிறக்கும். உவப்பான தினம்.

துலாம்- புதியவாதை வழி திறக்கும். புத்திரசுகமும் உண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்தில் இனிமை தங்கும்.

விருச்சிகம்- தானிய நஷ்டத்தால் வலைக் தங்காக்கும். தனிவழியை நாடுவீர். அலைதியும் மறக்கும்.

தனுசு- பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம். முன்எச்சரிக்கை நன்று.

மகரம்- எண்ணியவாறே ஏமாற்றம் தென்படும். நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

கும்பம்- தெவிந்தனம். தெய்வ குடும்பத்தியுடன் தேடுவது கிடைக்கும். பரோபகாரசிந்தை வளரும். பொதுப்பணியை நாடுவீர்.

மீனம்- இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். தனச்சிறப்புக்கும் இடமேற்படும். வெற்றி.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 16. 2. 72

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அல்லது 59 மீ

6-15 நாதாஞ்சலி-மங்கள வாத்தியம் 6-20 சைவநற்சிந்தனை-மகேஸ்வரி மகாதேவா 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-30 செய்திகள், 6-50 பண்ணிசைச்செய்திகள், 7-05 துதிப்பாடல், 7-30 மாலைச் செய்திகள், 7-35 குரலிசை, 8-00 இசைவேலாரம் குமாரசாமி, ஏ. கே. கருணாகரன், 8-15 இஸ்லாமிய கீதம்

6-10 அறிவிப்புகள், 6-15 சிறிலங்கா சிறுவர் நிகழ்ச்சி: நடத்துபவர் - திருமதி மொரேடோஸ் அவர்கள், 6-30 பாடுங்கே. சிவபிள்ளை 7-00 கண்ணதாசன் காவியம்- "வழித் தீ மூண்டேனோ", 7-15 திருக்குறள் அமுதம்- உயிர்க்குத் தீதிலாக: புலவர் பாண்டியனார், 7-30 உலகச் செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல்கள்: பாடல்கள் பாரதவர்: எழுத்து ரத்தினம், பாடுபவர்: மீனா மகாதேவன், 7-45 நாடகம்- 'ஓர் இரவு' எழுதியவர்: முஹம்மது நபீக், தயாரிப்பு: கே எம் வாசகர் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 செய்திகள் பின்னணியில், 9-15 அறிவிப்புகள், 9-30 இசைக்கச்சேரி- எஸ். பரம் திலக்ராஜா

இவ்வாண்டு முதல் தமிழிலும் நடத்தப்படும்

சங்கானை, செவ்வாய் இலங்கை நூலகச் சபையினால் நடாத்தப் பெற்றுவரும் நூலக விஞ்ஞான பரீட்சைகள் இவ்வாண்டு முதல் தமிழிலும் நடைபெறவிருக்கிறது. இதுவரை இப்பரீட்சை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே நடத்தப்பட்டுவந்தது. இவ்வாண்டு முதல் தொடர்ந்து இப்பரீட்சை தமிழிலும் நடத்தப்படுமாம்.

பரீட்சையில் தேர்ந்தவர்கள் க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் தமிழில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல்வேண்டும். இவ்வகுப்புக்கள் கொக்குவில் பல்கலைத் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் நூலக விஞ்ஞான விரிவுரையாளர் திரு. வே. பாக்கியநாதனால் மார்ச்மாதம்முதல் நடாத்தப்படும்.

"இளைஞர் இயக்கங்கள்

மக்கள் அறிவை வளர்க்க உழைக்க வேண்டும்"

புங்குடுதீவு, செவ்.

"நாட்டுச் சேவையே மகேசன் சேவையென்ற மனப்பான்மையுடன் இளைஞர்கள் சமூக நல்வாழ்வுக்காக உழைக்கவேண்டும். சமுதாய முன்னேற்றத்தில் இளைஞர்களின் பங்கு முதன்மையானது. இதனையே நாம் வழிபடுகின்றபோது இதயத்தியுடனும் அந்தரங்கத்தியுடனும் வழிபடவேண்டும். அப்போதுதான் நமது வழிபாடுகள் பெற்றன நாம் அடைய முடியும். மக்கள் மத்தியிலே அறிவு வளர்ச்சிப் பெருக்கம் இடம்பெறவேண்டியது மிக இன்றியமையாததாகும். மக்களை அறிவுப் பாதையில் வழி நடத்த இளைஞர் இயக்கங்கள் முன்னின்றுழைக்கவேண்டும்."

புங்குடுதீவிலுள்ள ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவினை, குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து உரை யாற்றிய புங்குடுதீவு அரசினர் மகாவித்தியாலய அதிபர் திரு. மு இராமலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்றச் செயலகத்திற்கண்மையிலுள்ள திறந்தவெளி அரங்கில் மன்றத் தலைவரும் சட்டக் கல்லூரி மாணவருமான திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலைய அதிபர் திரு. எஸ். சிவேந்திரன் மன்றக் கொடியினை ஏற்றிவைத்தார். இளைஞர் சக்தியின் மகத்துவத்தை பெரியோர்கள் உணர்ந்து தனிப்பட்ட ஆசாபாசங்களுக்கு இடமளியாமல் நாட்டு நலனையும் மக்கள் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு உழைக்கும் நமது மன்றத்திற்குச் சகல ஆதரவையும் மக்கள் அளிக்கவேண்டுமென்று தலைவர் தமது உரையில் கேட்டுக்கொண்டார். புங்குடுதீவு கிழக்கு கிராமசேவையாளர் திரு. தி. பாலசிங்கம், திரு. ந. இராசதுரை எழுத்துச் சிவானந்தன், க. சண்முகலிங்கம், க சிவநாதம், வ.க.சே ஸ்ரீகாந்த ராசா, சி சசிகாந்தன், ஐ குலேந்திரன், த நாகராசிங்கம், சி த நல்லையூரன், நகுலசிங்கம் ஆகியோருடன் மன்ற உறுப்பினர்கள் பலரும் உரையாற்றினர்.

ஜே. பி. ஆக நியமனம்

புங்குடுதீவு, செவ்.

புங்குடுதீவு கிராமசபை உப தலைவரும் 4-ம் வட்டார உறுப்பினரும் இறப்பிட்டி சனசமூக நிலைய தலைவருமான திரு. செ. சாந்திநேசு சமாதான நீதவானாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்

நிகழ்ச்சி, 9-10 செய்திகள் பின்னணியில், 9-15 அறிவிப்புகள், 9-30 இசைக்கச்சேரி- எஸ். பரம் திலக்ராஜா

"பண்பட்டவர்களை உருவாக்குவது விளையாட்டு"

ஊர்காவற்றுறை, செவ்.

தேர்தலையும் அஞ்சாநெஞ்சமும் விரிந்த மனப்பான்மையும் உடைய பண்பட்ட மக்களை ஊருவாக்குவது விளையாட்டு.

இடன் உதைபந்தாட்ட வெற்றிக்கேடயப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பி. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் தீவுப்பகுதியானவர் கல்வி உடல் நலங்களுக்கு ஆரம்பிக்கப்படல இப்போட்டியில் சாம்பியனாக வந்தவர் காரைநகர் ஊர்காவற்துறை புனித ஜேம்ஸ் சனசமூக நிலையக்கோஷ்டியினரைப்பாராட்டினார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் வணபிதா ஸ்கானிஸ்லோஸ் அவர்களின் முயற்சியில் பரிசுப் உருவாக்கப்பட்ட விளையாட்டுக் கழகம் வருடாவருடம் சிறப்புப்பெற்றுவருவதை செயலாளர் திரு. ஜேம்ஸ் சந்திரன் குறிப்பிட்டுப் பேசினார்.

ஊர்காவற்றுறை தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டிக்குமிடையே ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விழாவிற்கு முன்னதாக நடைபெற்றது. குறிப்பிடத்தக்கது.

வலி.மேற்கில் 4 சங்கங்கள் நிறுவப்படும்

அராலி, செவ்.

வலி. மேற்குப் பகுதியில் இறக்குமதி கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு நிறுவப்படவிருக்கின்றன. நவாலி சங்கானை கழிபுரம் பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்கள் தற்போது சங்கங்கள் அமைக்கத் தெரிவு செய்யப்படவிருக்கின்றன.

மற்றைய கிராமங்களில் வசிக்கும் சிவில் தொழிலாளிகள் இந்த நான்கு சங்கங்களிலும் தமக்கு அங்கத்வரவை ஒன்றில் உறுப்புரிமைபெற்றுக்கொள்ளலாம்.

உறுப்புரிமைப்பணம் ஐம்பது ரூபா செலுத்தவேண்டும். ஆறுமாதம் ஐந்து ரூபா வீதம் பத்து மாதங்களில் இக்கடன்தொகையை செலுத்துவதற்கு வசதியளிக்கப்படுகின்றது. முதற்தவணைப்பணத்துடன் பிரவேசப் பணம் ஒரு ரூபா செலுத்தவேண்டுமாம்

சிவில் தொழிலாளர் தாம் சேரக்கூடிய கிராமத்தில் அமைக்கப்படும் தலைமைகளில் ஒப்பங்கள்கலாம் சங்கானைச் சங்கத்திற்கு விரைவில் கட்டடமொன்று அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

பாகிஸ்தான் — இந்திய

போர்க்கைதிகள் பற்றி பிரிட்டிஷ் மந்திரி கருத்து

ஹாங்காங், பெப். 15

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் போர்க் கைதிகளைத் திருப்பிக்கொள்வது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நாடுகள் இருமுகப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் அலெக் டக்ளஸ் ஹியூம் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

போர்க்கைதிகள்பற்றி இருதரப்புப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்ற இந்தியக் கருத்தைப் பிரிட்டிஷ் பிரதமர் ஆதரிப்பதாகக் கருதப்படுகின்றது.

பாகிஸ்தான் இந்தியாவுடனும், வங்காளதேச அரசுடனும் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என சேர் ஹியூம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானையில் முக்கிய பிரச்னையொன்றின்மீது வாக்களிக்கவேண்டியிருப்பதால் அவர் அவசரமாகத் தாயகம் திரும்புகின்றார். அவர் தனது ஜப்பான் பிரயாணத்தையும், பாகிஸ்தான் பயணத்தையும் ரத்துச் செய்துள்ளார்.

வாழ்ப்பாணம், புதன்

வாழ்ப்பாண மாநகராட்சி மன்ற வாராந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 28-ந் திகதி மேயர் திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஜி. ஜி. 20ந் திகதி வருகிறார்

வாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இம்மாதம் 20ந் திகதி முற்பகல் வாழ்ப்பாணம் வருகிறார். நீண்ட கால இடைவெளிக்குப் பின் வாழ்ப்பாணம் வரும் திரு. பொன்னம்பலம் காங்கிரஸின் முக்கிய பிரமுகர்களிலொருவர் சந்திக்க ஆலோசனை நடாத்துவாரென்றும் வங்கை மகாநாட்டு அமைப்பாளர்களையும் அவர் சந்திப்பாரென்றும் அறியப்படுகின்றது.

—

புதிய தளபதிகாரி

பருத்தித்துறை, செவ்.

இலங்கை கடலோரத் தடுப்புச் சங்க வடமராட்சிக் கிளையின் பருத்தித்துறைப் பகுதிக்கு தளபதிகாரியாக திரு ஆர் எஸ் இராமநாதன்ரமணனாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. இராமநாதன் பருத்தித்துறைப் பகுதி மரணவிசாரணை அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

—

ராமகானசபா

கொழும்பு, திங்கள்

கொழும்பு ராமகானசபாவின் 34-வது வருடாந்தக் கூட்டத்தில் அதன் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். பாலசுப்பிரமணிய ஐயர், உபதலைவர் வை. சண்முகரத்தினசர்மா, காரியதரிசி ஆர் பி சர்மா, உதவிக்காரியதரிசி எஸ் சிவசாமி, தளபதிகாரி திரு எல். கிருஷ்ணமூர்த்தி ஆறுபேர் கொண்ட நிர்வாகக் கமிட்டி. ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

—

அரசின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுமிகும் தீவிர வடுகிச் சாம்பராகிவிட்ட தாகவும் கூறப்படுகிறது. சுமார் ஐயாயிரம் கிராமவாசிகள் தீயைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ச)

.....

கிரிகெட்

யு. எஸ். தளம் ரஷ்யா ஆட்சேபம்

மாஸ்கோ, பெப்.15

கிரிகெட் அமெரிக்க 6வது கடற்படைக்கு தளம் அமைக்கவிருப்பதற்கு சோவியத் யூனியன் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 6-வது கடற்படைக்கு கிரிகெட்தளம் அமைப்பது சம்பந்தமாக இருநாடுகளும் உடன்பாட்டுக்கு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமிழ்க்காங்கிரஸ் எம். பி. க்கள் என்ன செய்யவேண்டும்

காங்கிரஸ் பொதுச்சபை அடுத்தவாரம் தீர்மானிக்குமாம்

வாழ்ப்பாணம், புதன்

"புதிய அரசியல் அமைப்பு விஷயத்தில் தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவினர் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென தமிழ்க்காங்கிரஸ் பொதுச் சபை அடுத்த வாரம் தீர்மானிக்கவிருக்கிறது

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம் சிவசிதம்பரம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

. இவ்விஷயமாக தமிழ்க் காங்கிரஸ் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்திய தாகவும், திரு ஜி ஜி பொன்னம்பலம் உட்பட ஆறேமான உறுப்பினர்கள், பொதுச்சபையை விரைவில் கூட்டும்படி கோரியிருப்பதாகவும் திரு சிவசிதம்பரம் மேலும் தெரிவித்தார்

பொதுச்சபைக் கூட்டத்திற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை யென்றும் அதேமாக அடுத்த வார இறுதியில் நடைபெறுமென்றும் அவர் கூறினார்

தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்கள் உட்பட சில பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படுமென்றும் இக்கூட்டத்தில் திரு ஜி ஜி பொன்னம்பலமும் கலந்துகொள்வாரென்றும் அவர் தெரிவித்தார்

அரசியல் அமைப்பை ஆதரிப்பதா; எதிர்ப்பதா?

"பொதுச்சபை முடிவை ஏற்று நடப்போம்" என்கிறார் நல்லூர் எம்.பி.

வாழ்ப்பாணம், புதன்

'புதிய அரசியல் அமைப்புத்திட்டத்தை எதிர்ப்பதா? இல்லையா? என்பது பற்றி இன்னும் நாம் முடிவுசெய்யவில்லை. எமக்கென்று ஒரு கட்சி இருக்கிறது. தமிழ்க் காங்கிரஸ் எடுக்கும் முடிவிற்கமைய நாம் நடந்துகொள்வோம்'.

தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுத்தலைவரும், நல்லூர் எம் பியுமான திரு சி. அருளம்பலம் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விரைவில் நடைபெறவிருக்கும் தமிழ்க்காங்கிரஸ் பொதுச்சபைக் கூட்டத்திற்கு செல்வரென்றும், அச்சபை எடுக்கும் முடிவுகளை முழுமூச்சாக ஏற்றுக் கொள்வர்களென்றும், திரு அருளம்பலம் மேலும் தெரிவித்தார்.

இளிதொச்சி எம் பி திரு. வி ஆனந்தசங்கரியைப் அவரது ஆதரவாளர்கள் சந்தித்து புதிய அரசியல் அமைப்பு தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் அளிக்கவில்லையென்றும் அதனை ஆதரிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகிறது. இதேபோன்ற கருத்துக்களைக் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது. எம். பி. திரு. ஏ. தியாகராசாவையும் அவரது ஆதரவாளர் சந்தித்து புதிய அரசியல் அமைப்பை ஆதரிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்களென்றும் தெரிய வருகிறது.

.....

திடீர்...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

விலையுயர்ந்த வைரக் காரங்களும், ரேப்ரெக் கோடுகளும், டிரான்சிஸ்டர் ரேடியோக்களும் இந்த வியாபார ஸ்தாபனங்களில் கள்ளப்பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டன.

இவ்வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்களான திருமேனாதன் தலைமை கணக்குதிகாரி திரு. ஏ. பரமசோதி விசாரணை செய்தார். விசார ணையில் அங்கிருந்த வியாபார நிறுவன உரிமையாளருக்கு 14,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றும் இரு வியாபாரஸ்தாபன உரிமையாளர் மீது தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

25 ரூபா அபராதம்

கோண்டாவில், செவ்

இரு பொ ச பஸ்ஸில் 'டிக்கெட்' இல்லாத பிரயாணம் [illegible]க்கு 25 ரூபா அல்லது தற்போது விதிக்கப்படும் அபராதத்திலும் வார்க்க ஐந்து மடங்கு கூடுதலான அபராதம் விதிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது

'டிக்கெட்' இல்லாமல் பிரயாணம்செய்பவர்களால் நாளாந்தம் 1,25,000 ரூபா அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படுகிறதெனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது- 'டிக்கெட்' கட்டணம் உயர்த்தப்படும் அரசாங்கத்துக் குரிய வருவாய் இதனால் பாதிக்கப்படுகிறது என இரு பொ ச வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன

உபவேந்தர் பதவிஏற்கிறார்

கொழும்பு, செவ்

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் அபயசிங்கிரமா புதன் கிழமை பதவி ஏற்கிறார். பல்கலைக் கழகத்தின் இயக்குநர் சபை தெரிவு செய்யப்படும்வரை ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படுமென்றும் இதில் கல்விப்பகுதி அதிகாரிகளும் நிறைவேற்றுப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகளும் இடம்பெறுவதோடு பேராதனை, கொழும்பு ஆகிய பகுதிகளின் தலைவர்கள் விரிவுரையாளர். விரிவுரையாளர், கட்டுப்பெத்தை ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகப் பிரிவின் தலைவர்களும் ஆலோசனைச் சபையில் இடம்பெறுவர்.

—

ஜே. ஆர். ...

1ம் பக்கத்தொடர்ச்சி

வைப்பது சரியல்ல. இவ்வாறு அவர் பேசினார்.

எங்கே அறிக்கை?

கடந்த தேர்தலின் பின்னர் ஐந்தே கட்சியின் கொள்கையில் மாற்றங்கள் செய்வது சம்பந்தமாக ஆராயக் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை எங்கே? கட்சியின் புதிய கொள்கை என்னவென்று ஏன்று இந்தக் கூட்டத்தில் கிரேஷ்ட உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பினார்கள்.

ஜே ஆர் தெரிவித்தவை எடுத்தக்கள் பற்றி ஆராயக் கமிட்டியொன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே ஆர் ஜயவர்தன, தம்மைப் பற்றி விவாதிக்க இக் கூட்டத்துக் குத் தகுதி கிடையாது எனக்கூறி வெளியேறிய செய்தி முன்னே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கவிப்முடிவுகள்

கொழும்பு, செவ்

தேசிய கொத்தர் சபையின் 383வது இலக்க கவிப் மாவத்தை கிராம சபை மைதானத்தில் இம் மாதம் 18-ம் திகதி மாலை இழுக்கப்படவிருக்கிறது.

—

சிங்கராஜ வனம் துறைமுகம் பங்ளாதேஷ் கடற்படையிடம் ஒப்படைப்பு

சிட்டகாங், பெப். 15

சிட்டகாங் துறைமுகத்தை இன்று பங்ளாதேஷ் கடற்படையிடம் இந்தியக் கடற்படை ஒப்படைத்தது. பங்ளாதேஷ் சுதந்திர போராட்டக் காலத்தில் இத்துறைமுகத்தைப் பாகிஸ்தான் கடற்படையிடமிருந்து இந்தியப் படைகள் கைப்பற்றி இருந்தன.

புலிச்சிங் புதியவகைமிருகம்

கல்கத்தா பெப்.15

கல்கத்தா மிருகக் காட்சிசாலையில் இம் மாதம் 11-ம் திகதி புதிய இனமிருகம் ஒன்று பிறந்திருக்கிறது. இதற்குப் பெயர் புலிச்சிங் என்பதாகும், என்ன அதிசயம் என்று சிந்திக்கிறீர்களா?

பெண்சிங்கம் ஒன்றும் ஆண் புலியும் பிறந்த குட்டியே இப் புலிச்சிங். ஆராய்ச்சியாளர்கள் ஒடு கண்டுகுட்டியான பெண் சிங்கத்தையும் ஆண் புலியையும் பல ஆண்டுகளாகவைத்து வளர்த்தனர். இதற்கு முன்பும் இந்தப் பெண்சிங்கத்திற்கு சில குட்டிகள் பிறந்தன. ஆனால் அவை சிங்கமாகவே இருந்தன ஆனால் இம்முறை இரு இனத்தையும் சேர்ந்தவாக இக் குட்டி பிறந்திருக்கிறது. புலிச்சிங் சிங்கநிறம் புலியைப் போலவும் முகம் சிங்கத்தைப் போலவும் இருக்கிறது. புலிச்சிங்கின் காலில் இரு இனத்தைப்போல வன்றி புதிய முறையில் அமைந்திருக்கிறது.

இதில் ஒரு விசித்திரம்! புலிச்சிங் கைப் பெற்ற பெண்சிங்கம் அதற்குப் பால்கொடுக்க மறுத்து வருவதாகும் அக் குட்டிக்கு இப் பொழுது பால் புட்டி மூலம் பால்கொடுக்கப் பட்டு வருகிறது.

ஈழநாடு

கிரிகெட்

யாழ். மத்தி வென்றது

வாழ்ப்பாணம், புதன்

யாழ். மத்திய கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிகெட் போட்டியில், மத்திய கல்லூரி இரண்டு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

யூனியன் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 106 ஓட்டங்களைப் பெற்றது சாந்திக்குமார் 3 விக்கெட்டுகளையும், மகேந்திரன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். யூனியன் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 115 ஓட்டங்களைப் பெற்றது. சாந்திக்குமார் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 189 ஓட்டங்களைப் பெற்றது. சாந்திக்குமார் 49 ஓட்டங்களைப் பெற்றார். மத்திய கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 93 ஓட்டங்களைப் பெற்றது. சச்சிதானந்தம் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திடீரென்றக் இம்மழையேலும், நகரத்தினமும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினார்கள்.

(தே. தி)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு

பொதுக்கலைத் தகுதித் தேர்வு / சட்டப்படிப்பு (முதல் வருடம்) பொதுவிஞ்ஞானத் தகுதித்தேர்வு.

G. A. Q/ First - in - Laws/ G.S Q.

மேற்கூறிய பரீக்ஷைகளுக்கான வகுப்புகளுக்கு அறுபதி வேண்டுவோர் உடனடியாக விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

குறைந்தபட்ச தகைமைகள்:

பொ. க. த தே. / சட்டப் படிப்பு

க. பொ. த. (உயர்தரம்) பரீக்ஷையில் 4 பாடங்களில் சித்தி (இவற்றில் மூன்றாவது ஒரே தடவையில் இருக்க வேண்டும்)

பொ. வி. த தே.

க பொ. த. (உயர்தரம்) பரீக்ஷையில் மூன்று சித்திகள்.

விண்ணப்பப் பத்திரங்களை கல்லூரிக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். (விரப் பட்டியல் ரூபா 1) கடிதமூலம் பெறவிரும்புவோர் முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறை அனுப்பவும்.

பதிவாளரி,
கல்லூரிக் கந்தோர்.

4050

மணிவாக்கு

பகிடப்பலிக் கண்ணை முடிக்கொண்டு எல்லாம் இருட்டாகவுள்ளதே என்ற கருபவர், கண்ணைத் திறந்ததும் எப்படி வெளிச்சத்தைக் காணுவாரோ, அதேபோல, "நான்" என்ற அகந்தை உணர்ச்சியை விட்டு சரணாகதியடைந்ததும் நமக்குப் பேரின்பம் வாய்க்கிறது. — சுவாமி ராமதாஸ்.

சமூநாடு

Selanadu National Tamil Daily
Telegrams: "SELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருத வருஷம் மாசி மாதம் 4-ந் திகதி (16-2-72)

சட்டமும் ஒழுங்கும்

[illegible] சட்டசபைப் பொதுத்தேர்தலில் இரு கட்சியை அடித்துக்கொண்டு செத்துவிட்டு நகைகளையும் ரொக்கமாகவும் பத்தாயிரம் ரூபாவை ஒரு சோஷ்டியினர் கொள்ளையடித்துச்சென்றனர்.

[illegible] ஆயுதந்தாங்கிய கொள்ளைச் சோஷ்டி ஒன்று வாகனத்தில் ஒரு கொறிலை வழிமறித்து அந்த கொறிலைக் கடத்திச் சென்றது.

[illegible] வீதியில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணைப் பலவந்தமாகக் கடத்திச்சென்ற ஒரு சோஷ்டியின் முயற்சி பலனளிக்கவில்லை.

இப்படியான செய்திகளைத்தான் பொழுது விடிந்ததும் பத்திரிகைகளில் வாசிக்கிறோம். கொலை, கொள்ளை, வழிப்பறி ஆகிய குற்றச்செயல்கள் நிரைமும் அதிகரித்து வருவதையே இச்செய்திகள் காட்டுகின்றன. நாடெங்கும் குற்றச்செயல்கள் [illegible] பலரும் ஒப்புக்கொள்கின்றனர். இதற்கு அரசியல் வாதிகளையும் தெரிவிக்கின்றனர். குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு பொலிசாரும் மற்றவர்களும் முடிந்தவரை முயற்சிசெய்கின்றனர்.

இவர்கள் வழக்கறிஞர் சங்கத்தின் ஆதரவில் நடந்த ஒரு கருத்தரங்கில் சங்கத்தின் தலைவர் திரு. ஸ்ரீராமநாதன் கூறியபடி, சட்ட ஆட்சி என்பது சமூகத்தின் அமைதி தம்தான் சமூகம் தாழ்வானநிலைக்குப் போய்க் கொண்டிருப்பதற்கான அறிகுறியாகத் தென்படுகிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். வழக்கறிஞர்கள் தங்கள் பணியை பிழைப்புக்கான வெறும் தொழிலாகக் கருதாமல் சமூகத்தின் உயர்ந்த சேவையாகவும் கருதவேண்டுமென்றும் தனிநபர் தந்திரம் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்கள் முன்வரவேண்டுமென்றும் திரு. ஸ்ரீராமநாதன் தெரிவித்திருக்கிறார். இதேகருத்தாகவே பேரிய ஒப்புவேற்ற நீதிபரர், பொலிஸ் நீதிமன்ற நடவடிக்கைகளில் பெரும்மாறுதல் செய்யப்படவேண்டுமென்றும் வாஜிகிரேக் நீதிமன்றங்களில் செய்யப்படும் சில சமரச வழக்குகளையாவும் நீதியரிபான முறைக்கு அமமரிவாறாக ஏற்படுத்தும் முடிவுகளாக முடிந்து விடுகின்றனவென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நாடு புதிய திருப்பம் ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் முக்கியமான பொறுப்பும் கடமையும் இருக்கிறது. சட்டமும் ஒழுங்கும் நன்னாட்சிக்கு அடிப்படையானவை. எனவே சட்டத்தறையில் ஈடுபடுகின்ற வழக்கறிஞர்களும் அவர்களின் வழக்கறிஞர் சங்கத்தும்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது. நீதியும் நியாயமும், தர்மமும் நிலைபெற்றால்தான் மக்களும் நாடும் முன்னேறமுடியும். சட்டத்தை உருவாக்குபவர்கள் வேறும் சட்டத்தை மட்டுமே உருவாக்குவதில் ஈடுபடுவதாக நீதி, நியாயம், தர்மம் ஆகியவற்றையும் சட்டம் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டுமென்பதையும் சட்டம் எப்படிச் செயல்படுத்தப்படவேண்டுமென்பதையும் சரியாகக் கடைப்பிடிக்கவேண்டிய வழக்கறிஞர்கள்தான் பெரும் அருமை புடையவர்களாவர்.

இந்நிலையில் வழக்கறிஞர் சங்கத்தின் கருத்தரங்கில் அதன் தலைவரும் மற்றும் அதில் கலந்து கொண்டோரும் தெரிவித்த நல்ல கருத்துக்கள் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் ஈடுபடுவோர்களுக்கும் அரசில் தலைவர்களுக்கும் பெரிதும் பயன்படுவதாக இருக்கவேண்டும்.

இதேசமயம் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடைபெறும் சம்பவங்கள் பற்றியும் இவை அதிகரிப்பதற்கான காரணங்கள் என்பதையும் வழக்கறிஞர் சங்கம் ஆராய்வதும் அவசியமாகும். நாட்டில் சட்டங்களின் நுணுக்கங்களை வழக்கறிஞர்கள் தங்களுக்கு உரிமையாகக் கொள்ளலாம். ஆனால் பொதுவாக நாட்டின் சட்டங்களைப் பொதுமக்களும் அறிந்திருக்கச் செய்வதற்கு வழக்கறிஞர் சங்கம் ஆவன செய்யவேண்டும்.

ஈப் போதோ, எங்கேயோ, யாராலோ ஒரு வாக்கப்பட்ட சட்டம் கண்மூடித்தனமாக வந்து நமது நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் இன்னமும் வாதாடுகின்றனர். வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றும்புரியாது விழிக்கின்றனர். வழக்கறிஞரின் வாதத்திறமையால் குற்றம்புரிந்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதும் அப்பாவிகள் தண்டனைக்குள்ளாவதுமுண்டு. குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு காரணமாகச் சொல்லப்படுவதில் உண்மையிருக்கலாம்!

சட்டம் ஒழுங்கு நாட்டில் நிலவுவதற்கு நீதி நெறிவழியைக் கடைப்பிடித்து வழக்கறிஞர்களே வழிகாட்டிகளாக அவர்கள் சேவை உயர்வு பெறும்.

வாழ்க்கைச்செலவு உயருகிறது!

ஐயாறன் எழுதுவது

சொழும்பு மார்க்கெட்டிலே ஒரு கொத்து நாட்டுக்கோழி ஒரு ரூபாய் பத்து சதம் விலை சில நாட்களுக்கு முன் விற்றது. இப்போது இரண்டு ரூபாய்க்கு மேலும் உயர்ந்துள்ளதாம். சம்பா அரிசி கொத்து மூன்று ரூபாவாம்!

தென் இலங்கையிலே சில இடங்களில் ஈரவெங்காயம் ஒருத்தல் இரண்டு ரூபாய்க்கு மேலும் விற்கிறதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாழ்க்கைச் செலவுக் குறைவதற்குப் பதிலாக உயருவதைப் பார்க்கிறோம். இதனால் ஏழை மக்களுக்கும் மாதச் சம்பளக்காரர்களுக்கும் எவ்வளவு சங்கடம் என்பதை விளக்கத் தேவையில்லை.

ரேஷனுக்கு மேற்பட்ட அரிசியை விலையைக் கட்டுப்படுத்த ஏதாவது வழிசெய்யவேண்டுமென்று உச்நாட்டு வர்த்தக அமைச்சு விவசாய அமைச்சுடன் இப்போது ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது.

அரிசி, வெங்காய விலைகள் மார்க்கெட்டில் குறைய வேண்டுமானால் அவற்றுக்கான கட்டுப்பாட்டை அகற்றி விட்டால் போதும். புதிதாக கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் போதுதான், விலைகள் சந்தைகளும் ஆரம்பமாகின்றன. விலைகள் பெரிதும் உயர்ந்து கொண்டு போகின்றன. நெல்லைக் கொண்டு செல்வதற்கான புதிய கட்டுப்பாட்டைச் செய்ததும் தான், விலையும் உயர்ந்தது. அரிசி விலையைக் கட்டுப்பாடு செய்தால் மார்க்கெட்டிலிருந்து அரிசியும் மறைந்து விடக்கூடும்.

தமிழகத்திலே அரிசிக்கான கட்டுப்பாடுகளை நீக்கவேண்டுமென்றும், கட்டுப்பாடு உத்தரவுகளைத்தான் கள்ளச் சந்தையும், பதுக்கலும், விலை உயர்வுகளும் ஏற்படுவதாகவும் ராஜாஜி தீவிர பிரசாரம் செய்து வந்தார். கட்டுப்பாட்டைத் தளர்த்தியதும் விலையும் தளர்ந்தது.

ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன் தம்பர் மாவிட்டர் ஞாபகார்த்த விழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் கல்வி கருத்தரங்கில் சில அதிபர்களையும் ஆசிரியர்களையும் [illegible] தெரிவிக்கும்படி தம்பர் ஞாபகார்த்த குழு நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடமாகாண ஆசிரியர் சங்கம் வடமாகாண விஞ்ஞான, ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் ஆசிரியர்களும் புதிய கல்வித் திட்டமும் என்னும்பொருள் பற்றி இக்கல்வி கருத்தரங்கு இம்மாதம் 19 ம் தேதி காலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

உபகல்வி அதிபதி திரு. நஞ்சிற் ருபேரா இக்கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

அன்று மாலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு எஸ் ஆர் கனகரத்னம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும் தம்பர் மாவிட்டரின் உருவப்படம் திரை நீக்கம் செய்துவைக்கப்படுவதுடன் ஞாபகார்த்த மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

இப் பத்திரிகை "சமநாடு" லிமிடெட் பிதாமகத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் வேதகுளிதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 16-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

குறைந்த விலையில் உணவு முதலிய அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்பதே மக்கள் விருப்பமும் தேவையும். கட்டுப்பாடுகளின் நோக்கம் நல்லதாக இருக்கலாம். ஆனால் அதனால் விலைவாசிகள் உயர்வதாயின், அக்கட்டுப்பாடுகளை கடிய சிக்கிரம் அகற்றி விடுவதே பெரிய உபகாரமாகும்.

மக்களிடையே இவ்விஷயமாக அதிருப்தியும் சங்கடமும் அதிகரிப்பதை உணர்ந்து, அரசாங்கம் விலைவாசிகளைப் பராமரிக்க உடன் நடவடிக்கை எடுப்பது விவேகமாகும்.

0 0 0

பிரிட்டனின் மகாராணியான எலிசபெத், தாய்லாந்திக் ஆறுநாட்கள் கற்றுப் பிரயாணம் செய்கையில், சோறும் கறியும் கையால் எடுத்துச் சாப்பிட்டது ஒரு உலக செய்தியாக வெளியாகியுள்ளது. (நம் இலங்கைக்கும் இப்போது அவர் சட்டப்படி ராணிதான். சீக்கிரம் இங்கு குடியரசானதும் நமக்கும் ராணி இல்லாது போகும்)

மகாராணியே கையால் சோறும் கறியும் சாப்பிடுகையில், இங்கு நம்மிடையே புகழ்பெற்ற எழுத்துத்தரைகளில் சிலர் தங்களின் விடுகளிலும் கட்டாந்தி, முள்ளு ஸ்பூன் இவற்றைப் பாவிப்பதைப் பார்க்கிறோம்.

நாடு அடிமைப் பட்டிருந்த காலத்தில் வெள்ளைக்காரர்களே நாம் வார்த்து 'சாப்பி' அடித்தோம் அடிமைத்தனம் நீங்கிய பின் வெள்ளைக்காரர் நம்மைப் பார்த்து சொப்பி அடிக்கிறார்கள். வேட்டிகட்டி, குத்திராட்சம் மாலையும் அணிகின்றனர். பழைமையான தமிழரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றார்கள்!

உடை உணவு விஷயங்களில் ஐரோப்பியரை பின்பற்றுவதால் நமக்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கின்றது. மற்ற மக்களிடமிருந்து வேறு படுவதான ஒரு கூடாத மனப்பிராந்தியும் நமக்கு ஏற்படுகிறது

நிலைமை வரவர மாறி வருகிறதென்றாலும், இந்நாட்டுக்கு வேண்டாத உடையும், பழக்க வழக்கங்களும் நமது அடிமைத் தனத்தின் சின்னங்களாகவுள்ளவற்றை ஏன் நாம் இன்னும் பின்பற்ற வேண்டும்?

0 0 0

வருகிற வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் வைடி இந்து வாலிபர் சபை 8 வது வாரடு சம்பந்தமாக, வடமாண அரசாங்க அதிபர் விசுவ அமரசேகரா அவர்கள் அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச் செய்தியில் இன்கிற சக்திகள் மக்களின் சமய வாழ்வை முன்னேற்றத்துக்காகத் தொண்டாற்றுவது உற்சாகம் அளிப்பதாகுமென்று கூறி, அரசாங்கம் அளித்துள்ள நிவாரண இச்சலுகை விடுதியில் மக்களின் உதவிகள் பெற்று சீக்கிரம் ஆரம்பிக்குமென்று நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இம்முறை வாழ்ப்பாணத்தில் கொராத்திலைப் பல கோயில்களில் கொண்டாடியவர்களில் பெரும்பாலோர் இந்துவாலிபர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரத்தில்

திடீர் சோதனையில் கடத்தல் பொருள்கள் சிக்கின

யாழ்ப்பாணம், புதன் திருநெல்வேலி சுங்கப் பகுதி அதிகாரிகள் சோஷ்டி ஒன்று அண்மையில் அநுராதபுரத்தில் இருவிமானநிலையங்களில் நடத்திய திடீர் சோதனையின் மூலம் சுமார் ரூபா 40,000 பெறுமதியான கடத்தல் பொருட்களைக் கண்டுபிடித்தது.

கைக்கடிகாரங்கள், கைக்கடிகாரப்பட்டிகள், வானொலிப்பெட்டிகள், டேப்ரெக்கோர்டர்கள் போன்ற பொருட்கள் காணப்பட்டன.

இந்த இரு வர்த்தக நிலைய சொந்தக்காரர் களுக்கும் ரூபா 15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த சுங்கப்பகுதி சோதனைக் குழுவுக்கு உதவித் தடுப்பு அதிகாரி திரு என் ஜே ஜெயராசா தலைமை வகித்தார். திருவாளர்கள் கி ஏ வீரசிங்க, சி பி மாக்கியராசா ஆகியவர்கள் அவருக்கு உதவியாகவிருந்தனர்.

சுங்கப்பகுதி சப்னெக்டர் திரு ஏ பரம்சோதியின் நேரடி மேற்பார்வையில் கீழ்த்தரப்பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை சுங்க சோஷ்டியினர் குடிநாகலையிலுள்ள மூன்று வர்த்தக ஸ்தாபனங்களின்மீது மேற்கொண்ட விசோதனையின் போது சுமார் 30,000 ரூபா பெறுமதியான வெளிநாட்டுப்பொருட்களைக் கைப்பற்றினர்.

கடத்தி வந்ததாகச் சந்தேகிக்கப்படும் பொருட்களில் டேப்ரிகார்டர்கள் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகள் கைக்கடிகாரங்கள் ஆகியன அடங்கியிருந்தன.

மூன்று வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும் விசாரணைக்காக பிரதம சுங்க அதிகாரியான திருமலைமாவிட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீண்டநேர விசாரணையின் பின் இரு வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களுக்கு 12,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது, மூன்றாவது நபர்மீது தொடர்ந்து விசாரணை நடத்தவாறு உத்தரவிட்டுள்ளனர்.

சுங்க தடுப்பு அதிகாரி திரு என் ஜி ஜெயராசா, சுங்க அதிகாரி திரு சுபாகிஷராசா ஆகியோர் தலைமையில் சென்ற சுங்கசோஷ்டியே இச்சோதனையை மேற்கொண்டது.

கலைநாட்டின் சோதனை

அட்டன், நாவலப்பிட்டி, மாத்தளை ஆகிய இடங்களில் உள்ள பிரபல வியாபார ஸ்தாபனங்களை சோதனை செய்த திருமலை சுங்க சோஷ்டியொன்று கடத்தல் கொண்டுவரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சுமார் 60 000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கைப்பற்றியது.

சுங்க தடுப்பு அதிகாரி திரு என் ஜே ஜெயராசா தலைமையில் சென்ற இச்சுங்கச் சோஷ்டி திடீரென இந்த ஸ்தாபனங்களுக்குள் சென்று சோதனை நடத்தியது.

5ம் பக்கம்பார்க்க